(6 pages) **Reg. No. :** ______________

**Code No. : 30864** **Sub. Code : EETA 22**

## B.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2024

### Second Semester

### Tamil

### Elective — செம்மொழித்தமிழ்

(For those who joined in July 2023 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்து எழுதவும்.

1. வா.செ. குழந்தைசாமி கூறும் செம்மொழி தகுதிகள் எத்தனை?
   (அ) 8 (ஆ) 11
   (இ) 10 (ஈ) 6

2. தொன்மை, தொடர்ச்சி, செழுமை என செம்மொழிக்கு மூன்று தகுதிகளை கூறியவர்.
   (அ) வா.செ. குழந்தைசாமி
   (ஆ) கா. சிவத்தம்பி
   (இ) பரிதிமாற் கலைஞர்
   (ஈ) தேவநேயப் பாவாணர்

3. சாஸ்திரி – பொருள் தருக
   (அ) கலைஞர் (ஆ) பாணர்
   (இ) விறலியர் (ஈ) பாடகர்

4. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தன் பெயரை தமிழில் எவ்வாறு மாற்றிக் கொண்டார்.
   (அ) பரிதிமாற் கலைஞர்
   (ஆ) வையாபுரிப்பிள்ளை
   (இ) தாமோதிரப்பிள்ளை
   (ஈ) போப் ஐயர்

5. அஷ்டாத்தியாயி நூல் தோன்றிய காலம்
   (அ) 2 (ஆ) 4
   (இ) 6 (ஈ) 8

6. சொற்சுவையினை அற்புதமாக தமது படைப்புகளில் பயன்படுத்தியவர்
   (அ) காளிதாசர் (ஆ) பாரவி
   (இ) தண்டின் (ஈ) மாகன்

7. மொகஞ்சதாரோ மக்கள் பேசிய மொழி
   (அ) திராவிட மொழி
   (ஆ) ஆரிய மொழி
   (இ) சிமிட்டி மொழி
   (ஈ) முண்டா மொழி



8. மூன்று வகை சங்கங்கள் பற்றி குறிப்பிடும் நூல்
   (அ) தொல்காப்பியம்
   (ஆ) சிலப்பதிகாரம்
   (இ) இறையனார் களவியல் உரை
   (ஈ) நன்னூல்

9. சுக்கு மிளகு திப்பிலி என்ற போன்று மூன்று அறக்கருத்துக்களைத் தன்னகத்தே பெற்ற நூல்
   (அ) ஏலாதி (ஆ) சிறுபஞ்சமூலம்
   (இ) திரிகடுகம் (ஈ) கார்நாற்பது

10. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று புகழ்ந்தவர்.
    (அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன்
    (இ) வைரமுத்து (ஈ) நாமக்கல் கவிஞர்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>250</u> சொற்களில் விடை தருக.

11. (அ) கிரேக்க மொழியின் சிறப்புகளை எழுதுக.

    (அல்லது)

    (ஆ) செம்மொழி தகுதியினை மணவை முஸ்தபா வழி நின்று விளக்குக.



12. (அ) தமிழ் இணைய கல்விக் கழகம் செயல்படும் திறனை எழுதுக.

    (அல்லது)

    (ஆ) அறிவியல் தமிழின் தனித்தன்மைகள் குறித்து விளக்குக.

13. (அ) பாலி மொழியின் சிறப்புகளை எழுதுக.

    (அல்லது)

    (ஆ) பாரசீக மொழியின் செம்மொழி சிறப்புகளை இலக்கிய வழி நின்று விளக்குக.

14. (அ) தமிழின் தொன்மை குறித்து பரிதிமாற் கலைஞர் கூறும் செய்திகளை கூறுக.

    (அல்லது)

    (ஆ) தமிழின் தொன்மை தன்மைகளை சதாசிவ ஐயர் வழி நின்று விளக்குக.

15. (அ) நாலடியார் நூலின் சிறப்புகளை சான்று தந்து விளக்குக.

    (அல்லது)

    (ஆ) முத்தொள்ளாயிரம் குறிப்பிடும் மூவேந்தர்களின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

16. (அ) உலகச் செம்மொழிகள் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கிரேக்கம் மற்றும் லத்தின் பெற்றுள்ள செம்மொழிச் சிறப்புகளை ஆய்க.

17. (அ) தமிழ் செம்மொழி ஏற்பளிப்பு குறித்து மதிப்பிட்டு எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் செம்மொழி நூல்களை பகுத்தாய்க.

18. (அ) இந்திய மொழிகளின் தனித்துவங்களை நிறுவுக.

(அல்லது)

(ஆ) செம்மொழி தமிழின் சிறப்புகளை பகுத்தாய்ந்து கட்டுரை வரைக.

19. (அ) தமிழின் தொன்மை மற்றும் பழமையினை ஆய்க.

(அல்லது)

(ஆ) தமிழ்மொழியின் சிறப்புகளாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களை நிறுவுக.



20. (அ) செவ்வியல் இலக்கியங்களின் இலக்கணம் கூறி தமிழ் இலக்கியச் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) இறையனார் களவியல் உரை கூறும் முச்சங்க வரலாற்றை விரிவாக விவரி.

---